**செய்தி வெளியீடு எண்: 74/2023** **நாள்: 16.06.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் தொழில் தொடங்க, வணிக வளாகம் மற்றும் அலுவலக வளாகங்கள் அமைக்க அறிய வாய்ப்பு**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவன நிதி இயக்குநர் டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா தகவல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு சொந்தமான காலி இடங்களில் தொழில் முனைவோர்கள், வணிக வளாகம் மற்றும் அலுவலக வளாகங்கள் அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கான ஆலோசனை கூட்டம் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன நிதி இயக்குநர் டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா தலைமையில் மெட்ரோஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

அப்போது, சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களிலும் அதனை சார்ந்த காலி இடங்களிலும் தொழில் தொடங்க உள்ளவர்கள், வணிக வளாகம் மற்றும் அலுவலக வளாகங்கள் அமைப்பதற்கும் தேவையான இட வசதி உள்ளதாகவும் அதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் உள்ளதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன நிதி இயக்குநர் டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இயக்குநர் (நிதி) டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மெட்ரோ இரயில் நிறுவனம் வணிக மேம்பாடு அடைய பல்வேறு யுக்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு சொந்தமான காலி இடங்களில் அரசு அலுவலகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அலுவலக கட்டிடம் அமைக்க தேவையான இட வசதி உள்ளது. இதற்கான இட வசதி நேரு பூங்கா, சைதாப்பேட்டை, அரும்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி, மத்திய சதுக்கம், மண்ணடி, விம்கோ நகர், கோயம்பேடு ஆகிய பகுதிகளில் மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு சொந்தமான இடங்களில் 3000 சதுர மீட்டர் முதல் 10,000 சதுர மீட்டர் வரை உள்ளது. இதுபோன்ற இடங்களில் அடுக்குமாடி வணிக வளாகங்கள், அலுவலக வளாகங்கள் அமைக்கலாம்.

மெட்ரோ இரயில் நிலைய பொதுத்தளங்களில் சிறு குறு மற்றும் நடுத்தர கடைகள் நடுத்துவதற்கான இட வசதிகள் உள்ளன.

இதுபோன்ற இட வசதி பெற விருப்பம் உள்ளவர்கள் மேலும் தகவல்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை தொடர்பு கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட முகவர்களின் விவரங்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இணையத்தள முகவரியை https://chennaimetrorail.org/wp-content/uploads/2023/05/List-of-Empanelled-Consultants.pdf தொடர்பு கொள்ளவும்.

இக்கூட்டத்தில், திட்டமிடல் மற்றும் வணிக மேம்பாட்டு துறை முதன்மை பொது மேலாளர் ஆர். எம். கிருஷ்ணன், இணை பொது மேலாளர் ஆர். நரேந்திரகுமார் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**